பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக

ஓர் தட் டிலேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிக்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே

1. இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக
- ஆசிரியர் பெயர் :
- அவருக்குப் புகழ்சேர்க்கும் நூல் :
- தமிழுலகில் இவர் வல்லவராக விளங்கும் துறை :
- இவர் வாழ்ந்த காலம்

2. இப்பாடலில் கொடிய பஞ்சம் நிலவும் காலத்து அவலநிலை வெளிப்படும் வகையினை விளக்குக
3. சீதக்காதியின் கொடைச் சிறப்பு எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது
4. பின்வரும் தொடர்களுக்கான பொருளைத் தருக

ஓர் தட்டு :
கார்தட்டு :
ஆர்தட்டு :
மார்தட்டு :

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

**5.** ஓர் தட் டிலேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிக்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
(அ) **ஒக்கவிக்கும்** என்பதன் கருத்து யாது
(ஆ) தங்கள் காரியப்பேர் எனப்பட்டோர் யார்

**6.** ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே
(அ) **தட்டு வாராமலே** என்பது குறிக்கும் இருபொருள்களும் எவை
(ஆ) **அன்ன தானம்** என்பதால் நீர் கருதிக் கொள்வது

**7.** ஓர் தட் டிலேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிக்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
(அ) **பஞ்ச காலம்** என்பதற்கான சான்றுகளைத் தருக
**(ஆ) "ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே நெல்லும்"** என்பதன் மூலம் கூற முற்படுவது